ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2301/29 - 2022 ඔක්තෝබර් මස 11 වැනි අඟහරුවාදා - 2022.10.11

*2301/29 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ் இமதூவ பிரதேச சபையின் உப தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

உப தவிசாளர், தவிசாளராகியமை காரணமாக இமதூவ பிரதேச சபையின் உப தவிசாளர் பதவி வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) ஆம் பிரிவின் கீழ் உப தவிசாளர் பதவி வகித்த ஜயவிக்ரம கங்கானம்கே தர்மரத்ன ஜயவிக்ரம என்பவர் அங்கம் வசிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுண என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உப தவிசாளர் ஒருவராக தெரிந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்த வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவரும் இமதூவ பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளவருமான உப தவிசாளர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்காக வெலந்தகொட பதிரணகே அஜித் லசந்த என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும்;

1A - G 37753 — 16 (2022/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இமதூவ பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான வேவெல்வல ஹேவகே ரவீந்ர விஜய குமார ஆகிய நான் 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66 ஆ (2) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு வெலந்தகொட பதிரணகே அஜித் லசந்த என்பவர் இமதூவ பிரதேச சபையின் உப தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**டப்லிவ். எச். ஆர். விஜய குமார,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
இமதூவ பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
காலி மாவட்டம்,
2022, ஒற்றோபர் 10.

EOG 10 - 0091